**செய்தி வெளியீடு எண் : 1066** **நாள் : 31.05.2023**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் டாக்டர். மு. கருணாநிதி அவர்களால் 2008–ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம், 58 ஏக்கர் பரப்பினை கொண்ட அடையாறு உப்பங்கழியினை சீரமைத்து, "தொல்காப்பியப் பூங்கா" உருவாக்கப்பட்டு 22.01.2011 அன்று மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கலைஞர் டாக்டர். மு. கருணாநிதி அவர்களால் பொதுமக்களுக்கு திறந்து வைக்கப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

தற்போது. சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வரும் தொல்காப்பியப் பூங்காவில் பார்வையாளர்கள் மையம், நடைபாதை, பார்வையாளர் தளம், பார்வையாளர் மாடம், நுழைவு வாயில், உள்ளிட்ட மறு மேம்பாட்டு பணிகளை ரூ.42.45 கோடி மதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு நிருவாக அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தொல்காப்பியப் பூங்கா மறுமேம்பாட்டு பணிகளை ஓராண்டில் செயல்படுத்துவதற்கு சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in